# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.697/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | அமலராணி | க-பெ | ராஜசேகரன் |
| ஊர்: | : | கோவனி | | |
| வயது: | : | 60/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | விவசாயம் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **17.08.2026**

1 ம் **எதிரி ஆஜர். பிற எதிரிகள் ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------------

**குறுக்கு விசாரணை**

திருமணத்தின் போது எங்கள் தரப்பில் இருந்து எத்தனை பேர் வந்தார்கள் என்றால் 40 முதல் 50 பேர் வந்தார்கள். எதிரி வீட்டில் இருந்து எத்தனை பேர் வந்திருப்பார்கள் என்றால் 50 பேர் வந்திருப்பார்கள். புகார்தாரருக்கு எத்தனை சவரன் நகை போட்டோம் என்றால் 71 பவுன் நகை போட்டோம். எதிரிக்கு எவ்வளவு நகை போட்டோம் என்றால் 11 பவுன் நகை. மேற்படி மனுதாரருக்கு போட்ட 71 பவுன் நகை என்ன நகைகள் என்று சொல்ல முடியுமா என்றால் காசு மாலை 11 பவுன், கல்லு நெக்லஸ் 7 பவுன், தங்க நெக்லஸ் 4 பவுன், பெரிய டாலன் செயின் 11 பவுன், சிறிய டாலர் செயின் 7 பவுன், கல்லு மோதிரம் 6 கிராம், தங்க மோதிரம் 1 1/2 பவுன், ஆரம் 7 பவுன், கொலுசு, மாட்டல் 5 பவுன். எதிரிக்கு 4 பவுன் கை செயினும், 4 பவுன் கழுத்து செயினும், 2 மோதிரம் ஆகியவை போட்டோம். மேற்படி நகைகளை போட்டதற்கு ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் வெள்ளை பேப்பரில் எழுதி கொடுத்தோம். எங்கள் ஊர் பிரதிகள் மேற்படி பேப்பரில்கையொப்பம் செய்துள்ளார்களா என்றால் 2 நபர்கள் செய்துள்ளார்கள். மேற்படி 2 நபர்கள் யார் என்றால் சண்முகம் மற்றும் கருப்பையா என்பவர்கள் போட்டார்கள். மேற்படி வெள்ளை பேப்பர் நகல் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி நகல் பேப்பரை போலீசார் கைப்பற்றியுள்ளனரா என்றால் கைப்பற்றியுள்ளனர். வெள்ளை பேப்பரில் நகைகள் விவரங்கள் மட்டும் தான் உள்ளது என்றால் சரியல்ல 10 லட்சம் பணம் கேட்டார்கள் 4 லட்சம் கொடுத்தோம் என்றும் குறிபிட்டுள்ளோம்.

முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலீசார் என்னை எந்த தேதியில் விசாரணை செய்தார்கள் என்றால் தெரியாது. போலீசார் என்னை எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் காவல்

நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். வீட்டிற்கும் வந்து விசாரணை செய்தார்கள். வீட்டிற்கு வந்து விசாரணை செய்த தேதி தெரியுமா என்றால் தெரியாது. எந்த காவல் அதிகாரி விசாரணை செய்தார்கள் என்றால் காவல் ஆய்வாளர். மனுதாரரும் எதிரியும் எவ்வளவு நாட்கள் கணவன் மனைவியாக வாழ்ந்தார்கள் என்றால் 3 மாதம் வசித்தார்கள். திருமணத்தின் பின்னர் எதிரி என்னிடம் பேசினாரா என்றால் பேசவில்லை. முதல் விசாரணையில் எத்தனை நாட்கள் கழித்து வீட்டிற்கு வந்து என்னுடைய மகள் அழுதார் என்றால் 1 வாரம் கழித்து. மைக்கெல் என்பவருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 3 பேர். ஜான்ஸிராணி, அருன்செபஸ்டியன். ஜான்ஸிராணிக்கும், அருன்செபஸ்டியனுக்கும் எதிரிக்கு முன்பே திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான்.

ஜான்ஸிராணிக்கு திருமணம் ஆன பின்னர் இராமநாதபுரத்தில் தான் வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. ஜான்ஸிராணி எந்த ஊரில் வசித்து வருகிறார் என்றால் அமைதி பூங்கா தெரு, செஞ்சை. அருன்செபஸ்டியன் என்பவர் சென்னையில் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. எத்தனை வருடமாக இங்கு வாழ்ந்து வருகிறார் என்றால் அது பற்றி தெரியாது. அனைவரும் ஒரே குடும்பமாக தான் இருந்தார்கள். திருமணத்திற்கு பின்னரும் ஒரே குடும்பமாக தான் இருந்தார்கள் என்றால் சரிதான். எவ்வளவு நாட்களாக ஒரே குடும்பமாக வாழ்ந்தார்கள் என்றால் 1 வருடம், 2 வருடம் இருந்தார்கள், பின்னர் தெரியவில்லை. 2ம் எதிரியின் தாயார், 1ம் எதிரி திருமணத்தின் முன்பே இறந்து விட்டார் என்றால் சரிதான். மைக்கெல் அம்மா இறந்த பின்னர் தனியாக தான் வசித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. தனியாக குடித்தனம் வசித்து வர சொல்லி போலீசார் அறிவுருத்தியதின் பேரில் எந்த முகவரியில் குடித்தனம் நடத்தினார்கள் என்றால் பழனிச்சாமி தெருவில். மேற்படி பழனிச்சாமி தெருவில் எத்தனை வருடம் குடித்தனம் நடத்தினார்கள் என்றால் 3, 4 மாதம் இருந்தார்கள். மேற்படி தெருவில் புகார்தாரரும், எதிரியும் மட்டுமே குடித்தனம் நடத்தி வந்தார்கள் என்றால் சரிதான். பழனிச்சாமி நகர் முகவரியில் புகார்தாரரின் சகோதரர் டென்ஷிங் மற்றும் அவர் நண்பர் குமார் இருவரும் சேர்ந்து எதிரியிடம் தகறாறு செய்தார்கள் என்றால் தகறாறு செய்தார்கள். மேற்படி பிரச்சனையில் எதிரி காரைக்குடி மருத்துவமனையில் 1 வாரம் சிகிச்சையில் இருந்தார் என்றால் சரியல்ல. காரைக்குடி காவல் நிலையத்தில் டென்ஷிங் எந்த தேதியில் புகார் அளித்தார் என்றால் 29 தேதி மாதம் நினைவில்லை 2017 ம் வருடம். பழனிச்சாமி தெருவில் வசிக்கும் போது நகைகள் காணாமல் போனதாக சொல்லும் தேதி என்ன என்றால் தேதி தேரியாது. மேற்படி 29 ம் தேதியில் பிரச்சனையில் எதிரியும் டென்ஷங்கும் குமாரும் காரைக்குடி தெற்கு காவல் நிலையத்தில் சமாதானம் ஆகிவிட்டார்கள் என்றால் ஆமாம். புகார் அளிக்க காவல் நிலையத்திற்கு யார் யார் சென்றோம் என்றால் நான் எனது கணவர், எனது மகள் சென்றோம். சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதியில் காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை 04.05.2017 அன்று தான் புகார் அளித்தோம் என்றால் சரிதான். சம்பவம் உண்மையில் நடந்திருந்தால் சம்பவத்தன்று புகார் அளித்திருப்போம், திட்டமிட்டு பின்னர் புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தங்கை முறை உறவினர்களின் பெயர் தெரியுமா என்றால் பெயர் தெரியாது. யாரிடம் இருந்து நகைகளை வாங்கினோம் என்று எனது மகளுக்கு தெரியாது என்றால் தெரியாது. எனது மகளிடம் நான் சொல்லவில்லை. எனது தங்களை முறை உறவினர்கள் யாரேனும்

காவல்நிலையத்தில் எதிரி மீது புகார் அளித்துள்ளார்களா என்றால் அளிக்கவில்லை. அவர்களிடம் தெரிவித்துள்ளோம். தங்கை முறை உறவினர்களிடம் இருந்து வாங்கிய நகைகளை யாரிடம் கொடுத்தேன் என்றால் எனது மகளிடம் கொடுத்தேன் தேதி எனக்கு நியாபகம் இல்லை. எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் பழனிச்சாமி நகரில் உள்ள வீட்டில் வைத்து கொடுத்தேன். 30 பவுன் என்ன நகைகள் என்று தெரியுமா என்றால் ஆரம் 5 பவுன், பெரிய டாலர் 12 பவுன், சின்ன டாலன் 9 பவுன், ஆரம் 7 பவுன், நெக்லஸ் 7 பவுன், கழுத்து செயின் 4 பவுன், கை செயின் 1 பவுன். வளவி 4 பவுன், 2 மோதிரம், அதில் ஒரு கல்லு மோதிரம் 1/2 பவுன் ஒரு தங்க மோதிரம் 3/4 பவுன். புகார் கொடுத்த அன்றைய தினமே முதல்தகவல்  அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் 1 மாதம் கழித்து தான் பதிவு செய்தார்கள். தங்கை முறை உறவினர்கள் யாரையாவது காவல் துறையினார் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. எனது மகளுக்கு திருமணம் செய்தது 2 வது திருமணம் என்றால் சரிதான். முதல் திருமணம் முடிந்து எத்தனை வருடம் கழித்து 2 வது திருமணம் செய்தோம் என்றால்  2 1/2 வருடம் கழித்து. எதிரிகள் யார் யார் என்னென்ன கொடுமைகள் செய்தார்கள் என்று எனது மகள் சொல்லியுள்ளாரா என்றால்  சொல்லியுள்ளார். அனைவரும் ஒரே சங்கதியை சொல்லி கொடுமை செய்தார்கள் என்றால் சரிதான். எதிரி தரப்பில் இருந்து எனது மகளுக்கு நகை போட்டுள்ளார்களா என்றால்  இல்லை. கிருஸ்துவ முறை படி திருமணம் செய்யும் போது மணமகளுக்கு மணமகள் நகை போடுவார்கள் என்றால் சரிதான். காரைக்குடி மகளிர் காவல் நிலையத்தில் விசாரணை செய்யும் போது எதிரி தரப்பில் நகையை கொடுக்க சொல்லி கட்டாயப்படுத்தினார்கள் என்றால் சரிதான். போலீசார் சொல்லியும் எதிரி நகைகளை கொடுக்கவில்லை என்றால் சரிதான். திருமணத்தின் போது எனது மகளுக்கு நாங்கள் மட்டும் தான் நகைகளை போட்டோம் என்றால் சரிதான். நான் சொல்வது போல் வரதட்சனை சம்மந்தமாக எந்த கொடுமையும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எனது மகள் தனியாக குடித்தனம் நடத்த வேண்டும் என்பதற்காக எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. 2 வது எதிரியின் கணவர் இறந்த பின்னர் தனியாக இருந்துள்ளார் புகார்தாரர் எவ்விதமான சட்ட கடமையும் செய்யக்கூடாது என்பதற்காக எதிரியுடன் தனியாக குடித்தனம் நடத்தினார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் கொமைகள் அனைத்தும் எதிரிகள் குடும்பத்திற்கு தான் நடந்தது, எனது மகளுக்கு எந்தவித கொடுமையும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி எனது மகள் என்பதற்காக எனது மகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.08.20 14:13:50 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
CC. No.697/2022 P.W.3

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ராஜசேகரன் | த-பெ | மைக்கல் சாமி |
| ஊர்: | : | கோவனி | | |
| வயது: | : | 67/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | விவசாயம் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **17.08.2026**

1 ம் **எதிரி ஆஜர். பிற எதிரிகள் ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

-------------------------------------------------------------------------------------------

குறுக்கு விசாரணை

இந்த வழக்கின் புகார்தாரர் எனது மகள் என்றால் சரிதான். PW2 எனது மனைவி என்றால் சரிதான். போலீசார் எந்த தேதியில் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் 29.04.2017. எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். எந்த அதிகாரி விசாரணை செய்தார்கள் என்றால் பெயர் தெரியாது. DSP விசாரித்தார்கள். முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு எங்கள் தரப்பில் இருந்துஎத்தனை பேர் வந்தார்கள் என்றால் 30 முதல் 40 பேர் வந்தார்கள். எதிரி தரப்பில் இருந்து எத்தனை பேர் வந்தார்கள் என்றால் 25 பேர் குறையாமல் இருப்பார்கள். அமைதி தோட்டம் பூங்காவில் கணவர் மனைவியாக மனுதாரரும் எதிரியும் எத்தனை மாதம் வாழ்ந்தார்கள் என்றால் 6 மாதம் வாழ்ந்தார்கள். எதிரியின் சகோதரி திருமணம் ஆகி எங்கு வசிக்கிறார்கள் என்றால் தேவக்கோட்டையில் வசித்தார்கள் என்றால் சரிதான். 25 நாட்கள் காரைக்குடியிலும் 10 நாட்கள் தேவக்கோட்டையிலும் வசிப்பார்கள். 4 ம் எதிரி அருன்செபஸ்டியான் எதிரியின் திருமணத்தின் முன்பே திருமணம் செய்து எத்தனை நாட்கள் அமைதிதோட்டத்தில் வசித்தார்கள் என்றால் 6 மாதம் முன்பே வசித்து வந்தார்கள்.புகார்தாரரை 4 எதிரிகள் எவ்வாறு கொடுமைகள் செய்தார்கள் என்று தெரிந்த கொண்டேனா என்றால் எல்லா எதிரிகளும் என் மகளிடம் நகை, வரதட்சணை பணம் ஆகியவற்றை கூட்டாக கேட்டார்கள். திருமணத்தின்போது நகை மற்றும் சீதன பொருட்களுக்கு ஏதேனும் ஆவணங்கள் கொடுத்துள்ளேனா என்றால் வெள்ளை நிற தாளில் என்ன என்ன நகை என்று குறிப்பிட்டு மொத்தம் 60 பவுன் நகைகள் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. அந்த தாளில் ஊர் பிரதிநிதிகள் 4 நபர்கள் கையெழுத்து

இட்டுஉள்ளார்கள். மேற்படி அந்த வெள்ளை நிறத்தாளை மைக்கேல் அம்மாவிடம் ஒப்படைத்தேன். மேற்படி நகைகளும் அவரிடமே எனது மகளான புகார்தாரரே ஒப்படைத்தார். மேற்படி வெள்ளைத்தாளை விசாரணையின் போது காவல்நிலையத்தில் ஒப்படைத்தோம். விசாரணையின் போது நகைகளை போலீசார் புகார்தாரரிடம் ஒப்படைக்குமாறு எதிரியிடம் அறிவுறுத்தினார்கள் என்றால் சரிதான். மேற்படி பணம் 10 இலட்சம், 100 பவுன் நகை தந்தால் மட்டுமே நீ இந்த வீட்டில் வாழ முடியும் என்று மேற்படி எதிரிகள் புகார்தாரரிடம் சொன்னார்கள் என்றால் சொன்னார்கள் ஆனால் தேதி தெரியாது. மேற்படி எதிரிகள் மேற்படி பணம் மற்றும் நகைகள் கொடுக்க வேண்டும் என்று வீட்டை விட்டு விரட்டிவிட்டார்கள் என்றால் சரிதான் ஆனால் தேதி தெரியாது. எனது மகளும் ,மனைவியும் எதிரியின் வீட்டிற்கு சென்று கேட்ட போது எதிரிகள் நாங்கள் சொல்லியதை நிறைவேற்றும்வரை எனது மகளை அவர்களின் வீட்டில் வாழ விட மாட்டோம் என்று சொன்னதற்கான தேதி தெரியமா என்றால் தெரியாது. எனது மகள் எந்த தேதியில் நகைகளை அகற்றி விட்டு குளிக்கச்சென்ற போது 1ம் எதிரி நகைகளை எடுத்து க்கொண்டு எனது மகளை தள்ளி விட்டார் என்று சொல்லமுடியுமா என்றால் 25.04.2017 அன்று. மேற்படி எந்த முகவரியில் நடைபெற்றது என்றால் தெரியும் இப்போது ஞாபகம் இல்லை. மேற்படி காயத்திற்கு எனது மகள் சிகிச்சை பெற்றாரா என்றால் இல்லை. அந்த சமயத்தில் எனது மகள் கர்ப்பமாக இருந்தார் என்றால் சரிதான். அன்றைய தினமே காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. சாட்சி தற்போது அன்றைய தினமே புகார் கொடுத்துவிட்டதாகவும் போலீசார் 4 நாட்கள் கழித்துதான் புகாரை பெற்று கொண்டார்கள் என்றால் சரிதான். தனிகுடித்தனம் எத்தனை நாட்கள் வாழ்ந்தார்கள் என்றால் 4,5 மாதங்கள். 1ம் எதிரியை டென்சின் மற்றும் அவரது நண்பர் குமார் என்பவரும் தாக்கி அவர் மருத்துவனையில் சிகிச்சை பெற்றார் என்றால் எனது மகன் சொல்லி எனக்கு தெரியும். தாக்கியது சொந்த மைத்துனர் என்பதால் காரைக்குடி தெற்கு காவல் நிலையத்தில் 1ம் எதிரியும் எனது மகனும் சமரசம் செய்து கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 04.05.2017 அன்றுதான் எனது மகள் தாமதமாக புகார் அளித்தார் என்றால் சரியல்ல. சம்பவம் உண்மையில் நடைபெற்றிருந்தால் எனது மகள் அன்றைய தினமே புகார் அளித்திருப்பார் என்றாலும் வழக்கு சம்பவம் பொய் என்பதால்தான் கால தாமதமாக புகார் அளித்தார் என்றால் சரியல்ல. யாரிடமிருந்து நான் 30 பவுன் நகை கடனாக பெற்று எனது மகளை உறவினர் திருமணத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றால் அருளானந்து என்பவரின் மனைவியின் நகை . மேற்படி 30 பவுன் நகை என்ன என்ன நகை என்று குறிப்பிட முடியுமா என்றால் 13 பவுன் கவர்னர் மாலை, 7 பவுன் தங்க நெக்லஸ், சாதாரண நகை 8 பவுன் , செயின் 9 பவுன்,. மேற்படி உறவினரை எனது மகளுக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி அருளானந்து எதிரியின் மீது ஏதேனும் புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. மேற்படி அருளானந்தை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. மேற்படி நபரை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்க வி்ல்லை என்றால் சரிதான்.

எனது மகளுக்கு வரதட்சணை கேட்டு எவ்வித வரதட்சணை கொடுமையும்

செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் உண்மையில் அன்றைய தினமே புகார் அளித்திருப்பேன் என்றால் சரியல்ல. மைக்கேல் அம்மா மிகவும் வயதான நபர் அவரிடம் இருந்து தனிகுடித்தனம் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தில்தான் எனது மகள் பொய் புகார் அளித்தார் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் உண்மை என்றால் துணை கண்காணிப்பாளர் விசாரணை செய்யும் போதே வரதட்சணை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்திருப்பார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் வழக்கு சம்பவம் எதுவும் நடைபெற வில்லை என்றாலும் எதிரிகளுக்கும் , இவ்வழக்கிற்கும் எவ்வித தொடர்பு இல்லை என்றாலும் சரியல்ல.எனது மகளே வரதட்சணை தொடர்பாக போலீசாரிடம் வாக்குமூலம் அளிக்காத நிலையில் கேள்விப்பட்ட சாட்சியான நான் வழக்கின் முன்னேற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் எனது மகள் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.08.20 14:13:56 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.